# "மண்முனை தென் எருவில்பற்று பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட பாடசாலைகளில் கனிஷ்ட இடைநிலைப் பிரிவு மாணவர்களின் கற்றல் அடைவில் வீட்டுச்சூழல் ஏற்படுத்தும் தாக்கம்"

செல்வி. தம்பிராசா – தர்சினி

பதிவிலக்கம் - EU/IS/2005/AC/84

சுட்டெண் - CS 2578

LIBRARY
16 AUG
Eastern University, Sri Lanka.

இவ் ஆய்வுக்கட்டுரையானது இளங்கல்விமாணிச் சிறப்புப் பட்டக் கற்கை நெறியின் இறுதி வருடப் பரீட்சையின் ஓர் அங்கமாக இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகம், கலை கலாசாரப் பீடத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டது.

கல்வி பிள்ளைநலத்துறை,
கலை, கலாசார பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம்,
இலங்கை,

2011.

PROCESSED
Main Library, EUSL

61

FAC61
Project Report

# ஆய்வுச்சுருக்கம்

இலங்கையின் கல்வி நிருவாகச் செயற்பாடுகளில் ஒன்றாக விளங்கும் மட்டக்களப்பு கல்வி நிருவாக மாவட்டத்தில் அடங்கும் பட்டிருப்பு கல்வி வலயத்தின் மண்முனை தென் எருவில் பற்று கல்விக்கோட்டமே ஆய்வினை மேற்கொள்வதற்காகத் தெரிவு செய்யப்பட்ட பிரதேசமாகும். இப்பிரதேசத்தில் காணப்படும் பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்டு “கனிஷ்ட இடைநிலைப் பிரிவு மாணவர்களின் அடைவுமட்டத்தில் வீட்டுச்சூழல் ஏற்படுத்தும் தாக்கம்” எனும் தலைப்பில் ஆய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

பொதுவாக மாணவர்களின் அடைவுமட்டம் குறைந்து காணப்படுகின்றது. அதுமட்டுமன்றி, உளரீதியான மாற்றங்கள், பிறழ்வான நடத்தைகள் என்பன தற்போது அதிகமாகக் காணப்படுகின்றன. இன்றைய மாணவர்கள் நாளைய தலைவர்கள் ஆவார்கள். இவர்கள் பாடசாலையில் சிறந்த முறையில் பயிற்றப்பட்டால் தான் சமூகத்தில் சிறந்த பயிற்றுவிப்பாளராகலாம். ஆகவே அதற்கு கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் சிறந்த முறையில் அமைதல் வேண்டும்.

மகிழ்ச்சியற்ற குடும்பச்சூழல், பெற்றோரின் வறுமை நிலை, பெற்றோரின் கல்வியறிவின்மை என்பன பிள்ளைகளின் கல்வியில் கூடிய செல்வாக்கைச் செலுத்துவதனால் வீட்டில் பிள்ளைகள் கற்கமுடியாத நிலைக்கு ஆளாகின்றனர்.இதனால் கனிஷ்ட இடைநிலைப்பிரிவு மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளுக்கும் வீட்டுச்சூழலுக்கும் இடையேயான தொடர்பு எவ்வாறு காணப்படுகின்றது? இம்மாணவர்களின் அடைவுமட்டத்தில் வீட்டுச்சூழல் எந்தளவிற்கு தாக்கம் செலுத்துகின்றது? மாணவர்களின் அடைவுமட்டத்தில் தாக்கம் செலுத்தும் வீட்டுச்சூழல் காரணிகள் எவை? மாணவர்களின் அடைவுமட்டத்தை அதிகரிப்பதற்கு பெற்றோர்கள் நடவடிக்கைகளை மேற்கொள்கின்றார்களா? அரச,அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவிகள் கிடைத்துள்ளனவா? மாணவர்களின் அடைவுமட்டத்தை அதிகரிப்பதற்கு வீட்டுச்சூழலில் எவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் என்பதனை ஆராய்வதாகவே இவ்வாய்வு அமைகின்றது.

இவ்வாய்வறிக்கையினை மேற்கொள்வதற்கு ஆய்விற்காக மாதிரிமுறையில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் இருந்து அதிபர்,ஆசிரியர், மாணவர்களிடம் வினாக்கொத்துக்கள் மூலம் தகவல்கள் பெறப்பட்டு, மற்றும் மாணவர்களின் பெற்றோர்களிடம் பேட்டி காண்பதன் மூலமும், அவதானம் மூலமும் தகவல்களைப்பெற்று அத்தரவுகளின் பகுப்பாய்விற்கு அமையவே ஆய்வின் முடிவுகள் அமைகின்றன. ஆய்வின் முடிவுகள் பிள்ளைகளின் கற்றல் செயற்பாட்டில் பெற்றோரின் ஒத்துழைப்பு குறைவாகக் காணப்படுகின்றமை, வீட்டில் கற்பதற்கான வசதிகள் இன்மை, மாணவர்களின் சில தீய செயற்பாடுகள் போன்ற வீட்டுச்சூழல் காரணிகளால் அடைவுமட்டத்தில் பின்நிலை ஏற்படுவதுடன், சில நடத்தை மாற்றங்களையும் உண்டுபண்ணுகின்றது எனத் தெரியப்படுத்துவதுடன் அதற்கேற்ப பல தீர்வுகளும் முன்வைக்கப்பட்டுள்ளன.

## உள்ளடக்கம்


| அலகுகள் | | பக்கங்கள் |
|---|---|---|
| ஆய்வாளரின் உறுதியுரை (தமிழில்) | | iii |
| உறுதியுரை (ஆங்கிலத்தில்) | | iv |
| மேற்பார்வையாளர் சான்றிதழ் | | v |
| நன்றிரை | | vi |
| ஆய்வுச்சுருக்கம் | | vii |
| உள்ளடக்கம் | | viii –ix |
| அட்டவணைகள், உருக்கள் | | x-xi |
| **அத்தியாயம் ஒன்று** | | |
| 1.0 | ஆய்வு அறிமுகம் | 1 |
| 1.1 | அறிமுகம் | 1-5 |
| 1.2 | ஆய்வுப் பின்னணி | 5-9 |
| 1.3 | ஆய்வுக்கான நியாயம் | 9-13 |
| 1.4 | ஆய்வு நோக்கங்கள் | 14 |
| 1.5 | ஆய்வு வினாக்கள் | 14-15 |
| 1.6 | ஆய்வுப் பிரச்சினை | 15-18 |
| 1.7 | ஆய்வின் முக்கியத்துவம் | 18-19 |
| 1.8 | ஆய்வுப்பிரதேசம் | 19-27 |
| 1.9 | ஆய்வின் மூலம் எதிர்பார்க்கப்படும் வெளியீடுகள் | 27 |
| **அத்தியாயம் இரண்டு** | | |
| 2.0 | இலக்கிய மீளாய்வு | 28 |
| 2.1 | அறிமுகம் | 28-29 |
| 2.2 | கற்றலும் கற்றலின் முக்கியத்துவமும் | 29-30 |
| 2.3 | கனிஷ்ட இடைநிலைக் கல்வி | 30-38 |
| 2.4 | குடும்பம் பற்றிய விளக்கம் | 39-47 |
| 2.5 | பாடசாலைக்கல்வியும் வீட்டுச் சூழலும் | 48-51 |
| 2.6 | கற்றலுக்குப் பொருத்தமான வீட்டுச் சூழல் | 51-56 |
| 2.7 | கல்வியில் ஈடுபாடு கொண்ட பெற்றோர்களின் இயல்புகள் | 56-58 |
| 2.8 | அடைவு மட்டம் | 58-75 |
| 2.9 | வாசித்தறியப்பட்ட ஆய்வு முடிவுகள் | 75-76 |

அத்தியாயம் மூன்று


| | | |
|---|---|---|
| 3.0 | ஆய்வு முறைமையியல் | 77 |
| 3.1 | அறிமுகம் | 77 |
| 3.2 | ஆய்வு முறை | 77-79 |
| 3.3 | மாதிரித் தெரிவு | 79-80 |
| 3.4 | ஆய்வுக் கருவிகள் | 80-83 |
| 3.5 | தரவுப்பகுப்பாய்வு | 83-84 |
| 3.6 | ஆய்வொழுக்கப் பண்பும், ஆய்வறமும் | 84 |


அத்தியாயம் நான்கு


| | | |
|---|---|---|
| 4.0 | தரவுப்பகுப்பாய்வும், வியாக்கியானமும் | 85 |
| 4.1 | அறிமுகம் | 85 |
| 4.2 | தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகள் தொடர்பான தகவல்கள் | 85 |
| 4.3 | வினாக்கொத்தின் மூலம் பெறப்பட்ட தரவுகளின் பகுப்பாய்வும் வியாக்கியானமும் | 86-116 |
| 4.4 | பெற்றோர்களுக்கான பேட்டி காணல் | 116-124 |
| 4.5 | அவதானம் | 125 |
| 4.6 | பிரச்சினையை வரையறுத்தல் | 126 |


அத்தியாயம் ஐந்து


| | |
|---|---|
| 5.0 ஆய்வின் முடிவுகளும், விதந்துரைப்புக்களும் | 127 |
| 5.1 ஆய்வின் முடிவுகள் | 127-130 |
| 5.2தீர்வாலோசனைகள் / விதந்துரைப்புக்கள் | 131-138 |
| 5.3 எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள ஆய்வுகள் | 138 |